விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 134 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 18 புதன்கிழமை (01.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தமிழ்த் தேசியக் கட்சிகளால்
# வடக்கில் இன்று பெருமெடுப்பில் மே தின நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தொழிலாளர் தினத்தை வடக்கில் இன்று பெருமெடுப்பில் கொண்டாடுவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

மே தினத்தை அலங்கரிக்கும் வண்ணம் ஊர்வலங்களும் பிரதான மேடை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தின நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனநாயகத்தமிழ்த் 15

## சொல்ஹெய்ம் யாழ்.விஜயம்



15



உழைக்கும் வர்க்கம் அனைவருக்கும் இனிய தொழிலாளர் தின வாழ்த்துக்கள்

## தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து
# தங்களுக்கான தீர்வு குறித்து தீர்மானிக்க வேண்டும்
## பிரித்தானிய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கான பிரத்தியேக செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

**கேள்வி:** வடக்கு விஜயத்தின்போது பொதுமக்களை சந்தித்துள்ளீர்கள். அவர்கள் என்ன கூறினர்?

**பதில்:** அங்கு மிகவும் உறுதியான, மிகவும் சுறுசுறுப்பான, மிகவும் ஆற்றல் மிக்க நபர்கள் உள்ளனர். நான் மிகவும் ஈர்க்கக்கூடிய சில தொழில் முனைவோரை சந்தித்தேன். ஆவணப்படமெடுப்பவர்கள், விளையாட்டு வீரர்களைச் சந்தித் 04

## வவுனியாவில் 3 தனியார் பேருந்துகளின் அனுமதி இரத்து

(வவுனியா)

வவுனியாவிலிருந்து சேவையில் ஈடுபடும் மூன்று தனியார் பேருந்துகளின் வழித்தட அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டு அவைகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வட 15

## யாழ்ப்பாணம் நோக்கி இ.போ.சவில் பயணித்தவர் பேருந்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

கண்டியில் இருந்து யாழ் நோக்கி அரச பேருந்தில் பயணித்த நபர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் பேருந்தின் இருக்கையிலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று சாவகச்சேரி நகரை அண்மித்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி நபர் 15

## உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கவோ பரிந்துரைக்கவோ
## ஜனாதிபதிக்கு நீதிமன்றால் இடைக்காலத் தடை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் தவிர உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை அமுலாகும் வகையில், ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றத்தினால் இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு 15

## குளியலறையில் இருந்து ஆணின் சடலம் மீட்பு
## மானிப்பாயில் சம்பவம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் குளியலறையில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கல்லூரி வீதி, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இராசநாயகம் சிவகுமார் (வயது-60) என்பவரே இவ்வாறு அவரது வீட்டுக் குளியலறையில் இருந்து சடல 15

## மகிந்தவை சந்தித்த சீனத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Shenhong மற்றும் அவரது பாரியார் ஆகியோர் தமது இல்லத்திற்கு வந்து தன்னை சந்தித்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 15

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

(கொடிகாமம்)

நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தமது எரிபொருட்களின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளது.

அதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாயால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 368 ரூபாயாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## வேல்முருகு கனகசபாபதி

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள்,
சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்,
சிவஸ்ரீ சோமதனஞ்சயக் குருக்கள்,
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய
பிரதம குருக்களும் பரம்பரை அர்ச்சகரும்
ஆதீன கர்த்தாவும்

தோற்றம் 19.01.1939 மறைவு 30.04.2024

(628)

# மரண அறிவித்தல்

மலர்வு 28 - 07 - 1949



உதிர்வு 30 - 04 - 2024

## அந்தோனிப்பிள்ளை பீற்றர்குமார்

( ஓய்வுநிலை இறைவரிப் பரிசோதகர் யாழ் மாநகர சபை,
முன்னாள் பொருளாளர் மேய்ப்புப் பணிச்சபை யாழ்
மரியன்னை பேராலயம், புனித கார்மேல் அன்னை ஆலயம்,
உலக தரிசனம் புனித யாகப்பர் ஆலயம் குருநகர்
கடல்தொழில் குத்தகையாளர் சங்கம், பொருளாளர்
கடல் உணவு ஏற்றுமதியாளர் சங்கம்,
முன்னாள் தலைவர் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி,
பழைய மாணவர் சங்க கல்விக் கழகம் பிரான்ஸ்,
புனித யுத் கார்மேல் விளையாட்டுக் கழகம்,
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளை இல.31 )

யாழ்ப்பாணம் மவுண்ட் கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பீற்றர்குமார் அவர்கள் 30.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் இறைபதமடைந்த அந்தோனிப்பிள்ளை சிங்கம் - அன்னம்மா மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இறைபதமடைந்த அன்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இருதயநாயகி(லில்லி - ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் நிலுஷாவின்(மாணவி - திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை) அருமைத் தந்தையும் கிறேசியன்துரை(பிரான்ஸ்), கிளாறம்மா சூரியமலர்(பிரான்ஸ்), சகாயமலர்(பிரான்ஸ்), டக்ளஸ் அஞ்சலோ(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லூர்த்துநாயகி(பிரான்ஸ்), ச.அ.ஜெறோம் (ஓய்வுநிலை பிரதேச செயலாளர் பாண்டியன்குளம் (பிரான்ஸ்), அ.யோசவ்(ஓய்வுநிலை நில அளவையாளர்(பிரான்ஸ்), டெய்சி (பிரான்ஸ்) மற்றும் இறைபதம் அடைந்தவர்களான பிரான்சிஸ்கா (ஓய்வுநிலை ஆசிரியர்), ச.அ.ஸ்ரீபன்(ஓய்வு நிலை களஞ்சியக் காப்பாளர் வ.பி.போ.சபை), ச.அ.எட்வேட்ஸ்(ஓய்வுநிலை அத்தியட்சகர் வ.பி.போ.சபை), அருட்சகோதரி மேரிலூயிஸ் (தி.கு.சபை) மற்றும் ச.அ.ஸ்ரனிஸ்லாஸ்(பபா), ச.அ.சென் ஜேம்ஸ்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(620)

"தாயகம்",
42/5, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.இல :
021 222 2156
077 112 4531

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 19 - 07 - 1933



உதிர்வு 30 - 04 - 2024

## கனகசபை யதுகுலசிங் (SLEAS)

( ஓய்வு பெற்ற ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் – நல்லூர்,
கொழும்புத்துறை, பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் )

யாழ்ப்பாணம், மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசபை யதுகுலசிங் அவர்கள் நேற்று 30.04.2024 செவ்வாய்க்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை கனசபை - விசாலாட்சி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசு சதாசிவம் - கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் லலிதாம்பிகை(ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் பரந்தாமன்(மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்), அநிருத்தனன் (பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரம்யா(முகாமையாளர் மக்கள் வங்கி - கன்னாதிட்டி), சியாமளா (ஆசிரியை - சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்ஷயன்(பரியோவான் கல்லூரி), கௌசல்யா (புனித பொஸ்கோ), பிரகதி, வர்ஷினி(சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு) ஆகியோரின் பேரனும் ஞானாம்பிகை, நமசிவாயம், சதாசிவம், தனஞ்செயன், பஞ்சாட்சரம், சாரதாம்பிகை, அம்பிகாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் யாழ். கந்தர்மடம் 186, பலாலி வீதியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு மாலை எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

070 659 9078
071 440 2317

தகவல்:
குடும்பத்தினர்

(622)

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 01 - 1939



மறைவு 30 - 04 - 2024

## வேல்முருகு கனகசபாபதி

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கு அரசடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட வேல்முருகு கனகசபாபதி அவர்கள் 30.04.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிராமக்கோட்டு நீதிபதி சங்கரப்பிள்ளை வேல்முருகு - சீதாதேவி தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான நுளம்பியல் நிபுணர் இராமசாமி மகாதேவா - பாலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் திலகவதி அவர்களின் அன்புக் கணவரும் நரேந்திரன் (பொறியியலாளர் - லண்டன்), கௌரி(கனடா), தர்ஷினி(சட்டத்தரணி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினி(வைத்தியர் - லண்டன்), சிவகுமார் (கனடா), ஸ்ரீகணேசராஜா(சட்டத்தரணி - கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் அபி(லண்டன்), செயூரன்(கனடா), சேயோன்(கனடா), செந்தாழன்(கனடா), சாருகேஷன்(கொழும்பு), சாம்பவி(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம், மனோன்மணி, இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பகவதி மற்றும் விஜியறாணி(சட்டத்தரணி - பதில்நீதவான்), கனிமொழி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.05.2024 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசடி ஒழுங்கை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(626)

தகவல் : விஜியறாணி உருத்திரேஸ்வரன் மைத்துனி
(சட்டத்தரணி) - 021 226 3630
தர்ஷினி (மகள் - சட்டத்தரணி) - 077 697 8538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளர் நியமனம்;
# அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

(வவுனியா)

**தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளன.**






(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்

தொழிலாளர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் உழைப்பாளர்களாக அன்றி தாங்கள் கையேந்தும் வர்க்கத்தில் உள்ளதாகவும் போராட்டக்காரர்கள் இதன் போது தெரிவித்திருந்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக காலை போராட்டம் இடம் பெற்றது. கோஷங்களை எழுப்பியவாறும் ' பதாதைகளை தாங்கியவாறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகத்திற்கு முன்பாகவும் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-316)

# யாசகர்களுக்கு பணம் கொடுத்தால் கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பிரதான சந்திக ளின் வீதி விளக்குகளுக்கு அருகில் காத்திருந்து யாசகம் எடுப்பவர்க்ளுக்கு பணம் கொடுப்பவர்க்ளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, யாசகர்களுக்கு பணம் கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வேலைத்திட்ட த்தை நடைமுறைப்படுத்து வதற்காக கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத் தர்களும் சிவில் உடையில் பொலிஸ் குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (நி)

# மின்னல் தாக்கி சகோதரர்கள் பலி

(கொழும்பு)

மாத்தளை - இரத்தோட்டை, வெல்காலயாய பிரதேசத்தில் வீடொன்றில் இருந்த சகோதரனும் சகோதரியும் மின்னல் தாக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத் தியுள்ளது.

நேற்றுமுன் தினம் மாலை பெய்த மழையுடன் மின்னல் தாக்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரத்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுமியும் 23 வயதுடைய இளைஞனுமே மின்னல் தாக்கி உயிரி ழந்துள்ளனர்.

அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். சடலங்கள் இரத்தோட்டை வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. இரத்தோட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# மே தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கை முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மே தினத்தை முன்னிட்டு இவ்வாறு நாடு தழுவிய அடிப்படையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மே தினக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)



3ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்.
திரு. செல்லப்பா அரிராஜசிங்கம்
(தெய்வத்தாய் களஞ்சிய உரிமையாளர்) முத்து ஐயன் கட்டு இடதுகரை
பிறப்பு: 1948.03.08
இறப்பு: 2021.05.01
அன்பினால் அரனிட்டு அறிவுக்கண் திறக்க வைத்து
என்றுமே எமைக் காத்தீர் உன் நினைவே நிதம் எமக்கு
மாமனாய், தந்தையாய், அண்ணனாய், தம்பியாய், உற்ற தோழனாய்
ஓர் ஆசானாய் விளங்கிய எம் தெய்வமே
எம்மை எல்லாம் மீளாத்துயரில் விட்டு எங்கு சென்றாய்
உன் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கின்றோம்.
503, 7ஆம் யூனிற்,
இராமநாதபுரம், வட்டக்கச்சி.
மருமக்கள்.
(C-0238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'சபாஷ்' ஸ்ராய்னிஸ்

## ● இறுதி ஓவரில் மீண்டது லக்னோ
## ● ரோகித் பிறந்த நாளில் மும்பை சோகம்

ஸ்ராய்னிஸ் அரைச்சதம் அடித்து கைகொடுக்க, லக்னோ அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பை அணியை வீழ்த்தியது.

லக்னோவில் நேற்று நடந்த ஐ.பி.எல்., போட்டியில் மும்பை - லக்னோ அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

**இஷான் ஆறுதல்**

மும்பை அணிக்கு ரோகித், இஷான் கிஷான் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. ரோகித் 4 ஓட்டங்கள் மட்டும் எடுத்து மொசின் கான் பந்தில் வீழ்ந்தார். சூர்யகுமார் (10) நிலைக்கவில்லை. திலக் வர்மா (7) ரன் அவுட்டானார். அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, வந்த வேகத்தில் எதிர்கொண்ட முதல் பந்தில், ராகுலிடம் பிடி கொடுத்து "டக்" அவுட்டாகி வெளியேறினார்.

மும்பை அணி 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து திணறியது. அடுத்து இஷான், வதேரா இணைந்து அணியை மீட்க போராடினர். 5ஆவது விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் சேர்த்த போது, ரவி பிஷ்னோய் சுழலில் சிக்கினார் இஷான் (32).

**வதேரா நம்பிக்கை**

மறுபுறம் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய வதேரா, மயங்க் யாதவ் வீசிய 15வது ஓவரில் இரண்டு சிக்சர், ஒரு பவுண்டரி என மொத்தம் 16 ஓட்டங்களை விளாசினார். பிஷ்னோய் பந்தையும் பவுண்டரிக்கு அனுப்பிய இவர், 46 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மொஹமட் நபி (1) ஏமாற்றினார்.

கடைசி நேரத்தில் ரிம் டேவிட் சற்று வேகமாக ஓட்டங்கள் சேர்த்து அணிக்கு உதவினார். மொசின் கான் வீசிய 18ஆவது ஓவரில் தலா ஒரு பவுண்டரி, சிக்சர், 20 வது ஓவரில் இரண்டு பவுண்டரி அடித்தார். மும்பை அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 144 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. டேவிட் (35) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஸ்ராய்னிஸ் அபாரம்**

லக்னோ அணிக்கு ராகுல் (28), குல்கர்னி (0) ஜோடி ஆரம்பம் கொடுத்தது. தீபக் ஹூடா 18 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்ராய்னிஸ் ஐ.பி.எல்., தொடரில் 9ஆவது அரைசதம் எட்டினார். இவர் 62 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டர்னர் (5), படோனி (6) ஏமாற்றியபோதும், பூரன் (14), குர்னால் (1) ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றி பெறச் செய்தனர். லக்னோ அணி 19.2 ஓவரில் 145/6 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

**பிறந்த நாள் ஏமாற்றம்**

ரோகித்துக்கு நேற்று 37வது பிறந்த நாள். இந்நாளில் களமிறங்கிய ஐ.பி.எல்., போட்டி எதிலும் பெரியளவு சாதித்தது இல்லை. 2009ல் அதிகபட்சம் 17 ஓட்டங்கள் எடுத்தார். மற்றபடி 2014ல் 1, 2022ல் 2, 2023ல் 3, 2024ல் (நேற்று) 4 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றினார்.

## தங்களுக்கான...

தேன். வெளிப்படையாக அவர்கள் வெவ்வேறு பார்வைகளைக் கொண்டுள்ளனர். மேலும் போரின் பாரம்பரியத்தை எடுத்துரைப்பது அங்குள்ள மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

இளவரசி இந்த ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு முதல் விஜயத்தை மேற்கொண்டமையையும் நினைவூட்டுகிறேன். கண்ணிவெடி அகற்றப்பட்ட காணிகளுக்கு மக்கள் திரும்புவதற்கு உதவுகின்ற மற்றும் நாங்கள் உதவுகின்ற திட்டத்தையும் அவர் பார்வையிட்டார். நாங்கள் பல தசாப்தங்களாக கண்ணிவெடி அகற்றலுக்கு உதவி வருகிறோம், மக்கள் தங்கள் நிலத்திற்குத் திரும்புவதற்கு உதவுகிறோம்.

கேள்வி: இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தமக்கான அரசியல் தீர்வை நீண்ட காலமாக கோரி வருகின்றனர். சுதந்திரத்துக்கு முன்னர் ஐக்கிய இராச்சியம் இதனை அறிந்துள்ளது. அது பற்றி உங்கள் பார்வை என்ன?.

பதில்: நான் இங்கு பலதரப்பட்ட தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தினேன். அப்போது பலவித பார்வைகளை பார்த்தேன்.

அதிகாரப்பகிர்வு இருக்க வேண்டும் என்பதை அனைவரும் பரவலாக ஏற்றுக்கொள்கின்றனர். 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. எனவே தமக்கான தீர்வு எப்படி இருக்கும் என்பதில் தமிழர் தரப்பில் ஒருமித்த கருத்து இருந்தால் அது நல் லது என்று நினைக்கிறேன். தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், நான் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அதாவது, நீங்கள் ஒருமித்த கண்ணோட்டத்துடன் இருந்தால், வெற்றி பெறுவீர்கள் என்பது அரசியலின் உண்மை என்றார். (ம-7,10)

# கேள்வி அறிவித்தல்

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை, சபை நிதி வேலைத்திட்டம் - 2024

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 01.05.2024ந் திகதியிலிருந்து 14.05.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 15.05.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.05.09ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | வைரவர் கோவில் முன் வீதி புனரமைப்பு,சண்டிலிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/PSDG/2024/07 | 2.78 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 27,800.00 | 13.08.2024 |
| 02 | கட்டாப்பாளி வீதி திருத்தம், ஆனைக்கோட்டை NP/14/41(16)/W/PSDG(Main)/2024/08 | 1.69 | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 16,950.00 | 30.07.2024 |
| 03 | i) மொமெறியல் வீதி புனரமைப்பு, கட்டம் -1 மானிப்பாய் வடக்கு ii)நாவலடி கிளை ஒழுங்கை .புனரமைப்பு, மானிப்பாய் கிழக்கு NP/14/41(16)/W/CF/2024/09 | 3.45 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 34,500.00 | 13.08.2024 |
| 04 | i) செட்டிதோட்ட வீதி புனரமைப்பு(மிகுதிவேலை) உயரப்புலம் ii)புக்கைதின்னி பிள்ளையார் கோவில் பின் வீதி புனரமைப்பு,ஆனைக்கோட்டை NP/14/41(16)/W/CF/2024/10 | 2.71 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 27,200.00 | 13.08.2024 |
| 05 | i)இலகடி வீதி புனரமைப்பு,(மிகுதிவேலை) நவாலி வடக்கு ii)கொத்துக்கட்டி இராஜேஸ்வரி அம்மன் இணைப்பு வீதி புனரமைப்பு, நவாலி தெற்கு NP/14/41(16)/W/CF/2024/11 | 3.44 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 34,500.00 | 13.08.2024 |
| 06 | i) பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் 4ம் ஒழுங்கை புனரமைப்பு (மிகுதி வேலை) பிரான்பற்று ii) NP/14/41(16)/W/CF/2024/12 | 2.89 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 28,900.00 | 13.08.2024 |
| 07 | i)காளிகோவில் வீதி புனரமைப்பு,வடலியடைப்பு NP/14/41(16)/W/CF/2024/13 | 1.33 | 60 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 13,350.00 | 30.07.2024 |
| 08 | i)மாரீசன்கூடல் பிரதான வீதி புனரமைப்பு ii)சென்ஜேம்ஸ் 1ம் வீதி புனரமைப்பு,இளவாலை iii) பேச்சியம்மன் வீதி(பழைய பாடசாலை வீதி) புனரமைப்பு,(மிகுதிவேலை)சண்டிலிப்பாய் NP/14/41(16)/W/CF/2024/14 | 2.67 | 60 நாட்கள் | C8 and C7 (வீதி)) | 63 நாட்கள் | 26,750.00 | 13.08.2024 |
| 09 | வாகன தரிப்பிடம் அமைத்தல், தலைமையலுவலகம் NP/14/41(16)/W/CF/2024/15 | 4.92 | 60 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 49,300.00 | 13.08.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்**
**01.05.2024.**

(C-0241)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் சர்வதேச இரட்டையர் மாநாடு இலங்கை இரட்டையர்கள் 6 பேர் பங்கேற்பு

(கொழும்பு)

சீனாவில் நடைபெறவுள்ள சர்வதேச இரட்டையர் மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த இலங்கை இரட்டையர்கள் 6 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டனர்.

57 நாடுகளைச்சேர்ந்த சுமார் 100,000 இரட்டையர்கள் பங்கேற்கும் இந்த மாநாடு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள மொஜாங்கில் இன்று முதல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது . நவம்பர் 24 ஆம் திகதி உலகம் முழுவதிலுமிருந்து 4,000 இரட்டையர்கள் பங்கேற்கும் முதல் உலகளாவிய இரட்டையர்கள் மாநாடு இலங்கையில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மஹிந்தானந்த அளுத்கம விடுதலை கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் நீதிபதி நவரத்ன மாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)




## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
## 46, தெல்லிப்பளை வீதி, வட்டாரம் -13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 13, தெல்லிப்பளை வீதியிலுள்ள இல: 46 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **இராமு வீரகத்தியும் மறுபேரும்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை தம்பிப்பிள்ளை தம்பிமுத்துவும், தம்பிப்பிள்ளை கனகசபையும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5648/07.04.1963ஆம் இலக்க உறுதியால் **இராமு நாகமுத்துவும், இராமு வீரகத்தியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**வயித்திலிங்கம் இலட்சுமணண்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11113/15.09.1976ஆம் இலக்க உறுதியால் குறித்த தம்பிப்பிள்ளை தம்பிமுத்து ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் குறித்த தம்பிப்பிள்ளை தம்பிமுத்து ஆகியவர் தனது சகோதரன் குறித்த தம்பிப்பிள்ளை கனகசபை பெயருக்கு முடிந்த அறுதி உறுதிப்படி தனது கொள்வனவும் உரிமையும் ஆட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த **வயித்திலிங்கம் இலட்சுமணண்** பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14242/ 20.08.1986ஆம் இலக்க உறுதியால் **பொன்னம்பலம் சிவஞானம்** ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தை நிபந்தனையறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார். குறித்த பொன்னம்பலம் சிவஞானம் காலஞ்செல்ல குறித்த ஆதனம் **சிவஞானம் சிவபாலன்** ஆகியவரை பிதாவழி முதுசமாக வந்தடைந்தது.

குறித்த **வயித்திலிங்கம் இலட்சுமணண்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4955/07.01.2005ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவஞானம் சிவபாலன்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **வயித்திலிங்கம் இலட்சுமணன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வயித்திலிங்கம் இலட்சுமணன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

(613)



## விற்பனைக்கு




**KORD, KORA**

**அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு**

தொடர்புகளுக்கு

**076 097 3121**


# இராசிபலன்

01. 05. 2024
சித்திரை 18, புதன்கிழமை
அட்டமி பின்னிரவு 1.10 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.31 மணிவரை

சுபநேரம் -4.27-5.57 மணிவரை
இராகுகாலம்-11.57-1.27 மணிவரை
நடேசர் அபிசேகம்

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு** செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், அச்சுறுத்தலாக தோன்றிய காரியங்கள் முடிவில் ஆதாயம் தரும்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மீனம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நண்பர்களுக்கெல்லாம் நல்ல நண்பன் ஒரு நல்ல புத்தகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)


பேராசிரியர்சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் நூற்றாண்டு விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், மறுநாள் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் "பேராசிரியர் வித்தியானந்தனின் மனப்பதிவுகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும், யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் "விழுமியக் கல்வியின் தேவையும் போக்கும்" எனும் தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் பேராசிரியர் வித்தியானந்தனின் அளிக்கை பாணியில், பேராசிரியர் சி. மௌனகுருவின் நெறியாள்கையில் இராவணேசன் கூத்து அளிக்கை மற்றும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் து. அயூரனின் நெறியாள்கையில், காத்தவராஜன் கூத்து அளிக்கையும் இடம்பெறவுள்ளது. (நி-33)



யாழ். போதனா மருத்துவமனையில் நிலவி வருகின்ற குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யம் முகமாக தென்மராட்சி இளைஞர்களின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரத்ததான முகாம் இடம் பெற்றது. (படம்: சுபேசன்)

## ஆட்டை திருடி இறைச்சியாக்கியவர்களை தேடி பொலிஸார் வலைவீச்சு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தின் ஆடு ஒன்றைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் கட்டைக்காடு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கணவனை இழந்த குறித்த பெண் தனது இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் சூழலில் வாழ்வாதாரத்திற்காக ஆடுகளை வளர்த்து வருகிறார்

இந்நிலையில் குறித்த பெண்ணிற்கு சொந்தமான மேய்ச்சலுக்காக சென்ற ஆடு ஒன்றினை திருடி இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்தபோது கட்டைக்காட்டில் வைத்து இறைச்சி மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்றிருந்த மருதங்கேணி பொலிஸார் ஆட்டை இறைச்சிக்காக வெட்டிய இடத்தை கண்டுபிடித்ததோடு சந்தேக நபர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் அறிந்து குறித்த இடத்திற்கு சென்ற வெற்றிலைக்கேணி பெண் கிராம அலுவலருடன் மது போதையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தகாத வார்த்தை பிரயோகத்தில் ஈடுபட்டதாக வெற்றிலைக்கேணி பெண் கிராம அலுவலர் குற்றம் சாட்டியுள்ளார்.

கிராம அலுவலருடன் தகாத முறையில் நடந்து கொண்ட சம்பவம் குறித்து முள்ளியான் பொலிஸ் குழுக்களிற்கு அறிவிக்கப்பட்டு மருதங்கேணி பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (நி-60)

## வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

புங்கன்குள புகையிரதக் கடவை அருகில் உள்ள சந்தியிலிருந்து கச்சேரி கிழக்கு ஒழுங்கை வரையான வடிகாலமைப்பு அமைத்தல் - நிலை II வேலையின் பொருட்டு 02.05.2024 ஆம் திகதி முதல் 04.06.2024 ஆம் திகதி வரை புங்கன்குள வீதியினை பகுதியாகவும் விபுலானந்தா வீதியினை முழுவதுமாகவும் மூடி வேலையினை மேற்கொள்ள உள்ளதால் இக் காலத்தில் இவ்வீதிகளினை பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமன்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறு யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்தள்ளார். (நி)

## மாமுனை கடற்பகுதியில் இருவர் கடற்படையால் கைது

(கரணவாய்)

வடமராட்சிகிழக்கு மாமுனை கடற்பகுதியில் இரகசியத்தகவல் ஒன்றின் அடிப்படையில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இருவர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான கடற்றொழிலான இலை, குழைகளை கடலில் இட்டு கணவாய், மீனை பிடிப்பதற்காக இலை,குழைகளை படகில் ஏற்றிச்சென்ற இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட. இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தாழையடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (நி-60)

## 7 ஆயிரம் அரச காணி துண்டுகள் யாழில் பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரையிலான காலப் பகுதி யில் 7 ஆயிரம் அரச காணி துண்டுகள், காணி அற்றவர் களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள் ளதாக மாகாண காணி ஆணை யாளர் அம்பலவாணர் சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித் தார்.

யாழ்.மாவட்டத்தில் 5 வீதத் திற்கும் உட்பட்டதாகவே அரச காணிகள் காணப்படுகின்றன. சாவகச்சேரி , மருதங்கேணி , கோப்பாய் மற்றும் தெல்லிப் பழை ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அரச காணிகள் உள்ளன.

யாழ்.நகரை அண்டிய பகுதி களில் காணிகள் விஸ்தீரணம் கொண்டதாக இல்லை.

அதேவேளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அரச காணிகளை வழங்க தொடர்ந்து நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு வதாகவும், முதலீட்டுக்கு ஏற்ற காணிகளை பிரதேச செயல கங்கள் ஊடாக இனம் கண்டு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 100-130 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 80 | 120 |
| தக்காளி | 120 | 120 | 100 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-140 | 150 |
| கோவா | 160 | 150 | 200 | 120 | 200 |
| கரட் | 300 | 200 | 250 | 200 | 300 |
| பூசணி | 100 | 130 | 120 | 80-100 | 100 |
| புடோல் | 120 | 160 | 130 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 300 | 220 | 300 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 200 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 | 120-150 | 220 |
| லீக்ஸ் | 300 | 200 | 280 | 180 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 280 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 600 | 400-700 | 600 |
| போஞ்சி | 200 | 300 | 350 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 150 |
| தேசிக்காய் | 800 | 700 | 700 | 600-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 500-900 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 600 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 400 | 250 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 150 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 100 | -- |


சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



31 வருடங்களாக எமது சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்

திரு. பூச்சி ஆறுமுகம்

(சுகாதார தொழிலாளி-விசேடதரம்)

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ இப் பிறந்தநாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்நலன்புரிச்சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

(C-0239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தற்போது தலைவராக இருக்கும் திரு. மாணிக்கவாசகர் இளம் பிறையின் பணியும் பராட்டத் தக்கதாகவுள்ளது.

**பால்நிலை ஒப்புரவு சமத்து வத்திற்கான நிலையம்**

பல்கலைக்கழகத்தில் மாணவர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துக் கொண்டு இருக்கின்றது. மேலும் மாணவிகளின் எண்ணிக்கையும், மாணவர்களில் பெண்களின் விகிதாசாரம் மிகவும் உயர்வாக இருக்கின்றது. பணியாளர் மத்தியில் பெண்களின் விகிதம் மிகவும் உயர்வாகிக் கொண்டு வருகின்றது.

இந்நிலையில் பால்நிலை ஒப்புரவு சமத்துவத்திற்கான பணிகள் அதிகரித்துள்ளன. அண்மையில் இந் நிலையம் பால்நிலை ஒப்புரவு சமத்துவத்திற்கான ஆராய்ச்சி மாநாட்டினை நடாத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் திருமதி. சிவானி சண்முகதாஸ் தலைவராக செயற்படுகிறார்.

**சுகாதாரத்துறை**

இத்துறை பல்கலைக்கழக சுகாதார சேவையில் மிகப்பெரும் பணியாற்றி வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்களினது நலனையும், பணியாளர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நலனைப் பேணுவதிலும் சிறந்த பணியாற்றி வருகின்றது. தற்போது டாக்டர்.ராஜ்குமாரும், டாக்டர். லோரன்ஸ் ஆனந்தராஜாவும் மருத்துவர்களாகக் கடமையாற்றுகின்றார்கள். இவர்களுக்கு முன்னர் டாக்டர். வட்சன், டாக்டர். சீமாறன், டாக்டர். திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் நீண்டகாலம் சிறந்த சேவையாற்றி ஓய்வு பெற்றார்கள். மேலும். இன்று சுகாதாரமையம் தாதிகள், மருந்தாளர்கள், அம்புலன்ஸ் வசதிகள் கொண்டும் சிறப்பாக இயங்குகிறது.

**பொறியியற்சேவைப் பகுதி**

பல்கலைக்கழக ஆரம்ப காலத்தில் பராமரிப்புத் துறையாக இருந்து தற்போது பொறியியற் சேவைப் பகுதி என பெயர் மாற்றம் பெற்று சிறப்பாக சேவையாற்றி வருகின்றது. ஆரம்பத்தில் எந்திரி. வி.நாகேந்திரா, எந்திரி.ஆர். மணிவண்ணன், எந்திரி.எஸ்.தயாபரன் ஆகியோர் கடமையாற்றினார்கள். இன்று எந்திரி.ஏ.அரவிந்தன் கடமையாற்றுகின்றார். இப்பகுதியில் பல்வேறு தொழிற் திறன் கொண்ட தொழிலாளர்களும், மேற்பார்வையாளர்களும் நாளாந்தப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டு பல்கலைக்கழக இயக்கத்தில் ஆக்க பூர்வமான பணிகளை ஆற்றுகின்றார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1980களின் பகுதியிலும் 1990களின் ஆரம்பிக்கப்பட் நூலகம், மாணவர் மையம், கலைப் பீட கட்டடத் தொகுதி, முகாமைத்துவ துறையின் மூன்று அடுக்குக் கட்டடம், இராமநாதன் நுண்கலைப் பகுதி கட்டடத் தொகுதிகள் ஆகியன கட்டடப் பொருட்கள் இன்மை, ஒப்பந்தகாரர் கைவிட்டமை, நிதியின்மை போன்ற பல பிரச்சினைகளால் கட்டடங்கள் பொறியியற் பிரச்சினையும் கொண்டிருந்தன.

இந் நிலையில் 1997இற்கு பின்னர் யாழ்ப்பாணக் கட்டடத் திணைக்களத்தின் பிரதம எந்திரியான, எந்திரி தேவராசாவும் எந்திரி செல்வி. வசந்தி குலவீரசிங்கமும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பி. பாலசுந்தரம் பிள்ளைக்கு மிகவும் அறிமுகமானவர்கள்.

இருவரும் இணைந்து கட்டி முடிக்கப்படாதிருந்த பல்கலைக்கழக




கட்டடத் தொகுதிகள் யாவற்றையும் கட்டித் தந்தார்கள். கட்டடத் திணைக்களம் நேரடித் தொழிலாளர் முறையில் கட்டினதால் பெரிய எவு பணமும், கட்டடப் பொருட்களும் மிச்சப்படுத்தப்பட்டன. நூலகக் கட்டட ஒதுக்கீட்டில் நூலகமும், நூலக தெற்கு புதிய கட்டடமும், மருத்துவ பீடத்தில் மூன்று அடுக்கு நூலகக் கட்டடமும் அமைக்கப்பட்டன. மாணவர் மைய பிரதான கட்டடத்துடன், அதனுடன் இணைந்த மேற்குத் தொகுதியும் அமைக்கப்பட்டன. கலைப்பீடக் கட்டடத் தொகுதி முகாமைத்துவக் கட்டடம், இராமநாதன் நுண்கலைக் கட்டடத் தொகுதியாகவும் ஒரு சில வருடங்களில் எந்திர தேவராசாவால் கட்டி முடிக்கப்பட்டன.

பிரதம எந்திரி தேவராசா பல்கலைக்கழகக் கட்டட நிர்மாணத்தில் மிகச் சிறந்த பணியை ஆற்றியுள்ளார். கட்டடங்களைக் கட்டி முடித்த எந்திரிகள் இருவரும் இன்று எம்முடன் இல்லை என்பது கவலைக்குரியது. பல்கலைக்கழகம் வெள்ளி விழாக்காணும் இன்றைய நிலையில் பல்கலைக்கழகம் இவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

பிரதம எந்திரி தேவராசாவின் அறிவு, ஆற்றல் ஊழலற்ற செயற்பாடு, கடின முயற்சி ஆகியவற்றால் தான் யாழ்ப்பாணப் பொது நூலகம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, புதுப் பொலிவு பெற்றது என்பதை இவ் விடத்தில் குறிப்பிடுவது சிறப்பான தாகும்.

**மீன்பிடி கற்கை அலகு**

துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் காலத்தில் 1999 ஆம் ஆண்டு மே மாதம் மீன்பிடி டிப்ளோமா அலகு உருவாக்கப்பட்டு இதன் தலைவராக பேராசிரியர் சித்திரவடிவேல் நியமிக்கப்பட்டார். பேராசிரியர் சித்திரவடிவேல் நீண்டகாலமாக தொண்டமனாறு ஆராய்ச்சி நிலைய இயக்குனராகவும் பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றிருந்தார். இவரது அறிவு ஆற்றல் முகாமைத் திறனைப்பயன்படுத்தி இக்கற்கை நெறி அலகு அமைக்கப்பட்டது. இவ் அலகின் கீழ் இரண்டு அணி மாணவர்கள் கல்வி கற்று வெளியேறி ஆசிரியர் தொழிலும் மீன்பிடித் துறைசார் தொழில்களிலும் கடமை புரிகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இக் கற்கை நெறி சுயநிதி அடிப்படையில் இயக்கப்பட்டது மாத்திரமல்லாது இவ் அலகிற்கு பெரும் எண்ணிக்கையான உதவிகள் பேராசிரியர் சித்திரவடிவேலினுடைய பழைய மாணவர்களாலும் ஆராய்ச்சி பங்காளிகளாலும் வழங்கப்பட்டிருந்தன. இவ் அலகு பல்கலைக் கழகத்தின் மீன்பிடித்துறை அமைக்கப்பட்டதன் பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. இவ் அலகு குறுகிய காலத்தில் சிறந்த மனித வளத்தை மீன்பிடித்துறைக்கு வழங்கியுள்ளது.

**ஊடக வள பயிற்சி மையம் (MRTC)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக வள பயிற்சி மையம் அமைக்கப்படவேண்டும் என 1990 களில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்களால் கோரிக்கைகள் பல்கலைக் கழகத்திற்கு முன்வைக்கப்பட்டன. இக் கோரிக்கைகளை பரிசீலித்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை யுனெஸ்கோ நிறுவனத்துடன் தொடர்புகொண்டு நிறுவுமாறு கேட்டுக்கொண்டார். யுனெஸ்கோ நிறுவனம் இதற்கு உடன்பட்ட பொழுதும் இதற்கு நிதி ஆதாரத்திற்கு டென்மார்க் அரசாங்கத்தின் உதவியை நாடினார்.

2002 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் உதவியுடன் யாழ்ப்பாண நகர் மையத்தில் உள்ள



பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகத்திற்கு மலேசிய ஓய்வூதியர்களால் அளிக்கப்பட்ட கட்டடத்தில் இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்தை டென்மாக் உயர்ஸ்தானிகர் திறந்து வைத்தார்.

இந்த மையத்திற்கான கட்டடம், மின்சாரம் மற்றும் பாதுகாப்புச் சேவையை பல்கலைக்கழகம் வழங்கும் என்றும் கற்பித்தல் நிர்வாகம், வளங்கள் ஆகியன வற்றை டென்மார்க்கால் தர வேண்டும் என உடன்பாடு காணப்பட்டது. பின்னர் டென்மார்க்குடன் சுவிடன், நோர்வே நாடுகளும் இந் நிலையத்தின் இயக்கத்திற்கு ஆதரவுகள் வழங்கின. இருவருக்கு வெளிநாடுகளில் ஊடகக் கல்வி பயிற்சி பெற புலமைப்பரிசு தருவதாகவும் உடன்பாடு எட்டப்பட்டது. இதன்படி அருட்தந்தை மரியாம்பிள்ளை இங்கிலாந்திற்கும் திரு.ரி.தேவானந்தா டென்மார்க்கிற்கும் ஊடகத் துறையில் உயர்கல்வி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர்.

இப் பின்புலத்தில் MRTC இல் ஊடகவியல் டிப்ளோமாக் கற்கைகள் சில காலங்கள் நடைபெற்று வந்தன. பேராசிரியர்களான சண்முகதாஸ், வி.பி.சிவநாதன், பி.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் ரி. தேவானந்தன் இயக்குனர்களாகப் பணிபுரிந்துள்ளார்கள்.

இப் பின்புலத்திலேயே பல்கலைக் கழகத்தில் ஊடகக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு இன்று அது தனித்துறையாகவும் வளர்ச்சி பெற்ற நிலையிலும் காணப்படுகிறது. ஊடகத்துறை பேராசிரியராக ரகுராம் விளங்குகின்றார். இவர் தற்போதைய கலைப்பீடாதிபதியாக இருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது ஊடக வள பயிற்சி மையம் ஊடகத் துறை, கலைப்பீடத்தின் கீழ் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஊடகவியளாளருக்கான பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் இந் நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதும், பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் இவ் மையத்தில் ஆய்வுகூடப் பயிற்சிகளை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கன. இவ் மையம் அமைந்துள்ள காணி யாழ்நகர மையத்தில் அமைந்திருப்பதனால் கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்துவதற்கு மிக சிறந்த வசதி வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## "காலிஸ்தான் ஜிந்தாபத்" கோஷங்களால் ஆத்திரமடைந்த இந்தியா

### இந்தியா – கனடா உறவில் மீண்டும் விரிசல்



(ஒட்டாவா)

கனடாவில் சீக்கியர் தினம் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றார். அப்போது "காலிஸ்தான் ஜிந்தாபாத்" என்ற கோஷம் எழுப்பியதாக கூறப்படுகிறது.

இந்த செயல் இந்தியாவை ஆத்திரமடையச் செய்துள்ளதுடன் கடும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக டில்லியில் உள்ள இந்தியாவிற்கான கனடா துணைத் தூதுவரை அழைத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிரிவினைவாதம், தீவிர வாதம் மற்றும் வன்முறைக்கு, கனடா மீண்டும் இடமளித்துள்ளதை இது மீண்டும் ஒருமுறை எடுத்துக் காட்டுகிறது.

காலிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பியது இந்தியா-கனடா உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொலம்பியாவில் விழுந்து நொறுங்கிய ஹெலிகொப்டர்

### 9 வீரர்கள் உயிரிழப்பு

(கொலம்பியா)

கொலம்பியாவில் இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியதில் ஒன்பது வீரர்கள் பலியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொலம்பியாவின் வடக்கு பகுதியில் உள்ள சான்டா ரோரா நகராட்சியில் முகாமிட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு தேவையான பொருட்கள் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில் பொருட்களை இறக்கிவிட்டு புறப்பட்ட ஹெலிகொப்டர் சிறிது நேரத்தில் விழுந்து நொறுங்கியுள்ளதுடன் இதில் இருந்த ஒன்பது வீரர்கள் பலியாகியுள்ளனர்.

புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானமானது தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்ததாகவும் பின்னர் சாண்டா ரோரா நகராட்சிக்கு அருகில் விபத்துக்குள்ளானதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (நி)

## கொவிஷூல்ட் தடுப்பூசி பக்க விளைவை ஏற்படுத்தும் ஒப்புக் கொண்ட பிரித்தானிய நிறுவனம்

(லண்டன்)

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நாடுகளும் தடுப்பூசியை கண்டுபிடிக்க முயற்சித்த நிலையில், ஒரு சில நாடுகள் அதற்கான தடுப்பூசிகளை கண்டுபிடித்தன.

இதில் பிரித்தானியாவைச் சேர்ந்த அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் இணைந்து தடுப்பூசியை உருவாக்கின.

இந்த தடுப்பூசி இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டது.

இதற்கிடையே அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியை செலுத்திய பிறகு மூளையில் பாதிப்பு ஏற்பட்டதாக கூறி ஜேமி ஸ்காட் என்பவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் தொடர்ந்திருந்தார்.

மேலும், அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்திற்கு எதிராக நஷ்ட ஈடு கோரி சுமார் 51 வழக்குகள் தொடரப்பட்ட நிலையில், இவ்வழக்குகள் மீதான விசாரணைகள் நடந்து வருகிறது.

இந்நிலையில், அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் நீதிமன்றத்தில் அளித்த ஆவணத்தில், "தன் நிறுவனம் உருவாக்கிய கொவிஷீல்ட் கொவிட் தடுப்பூசி ஒரு அரிய பக்க விளைவை ஏற்படுத்தும்" என ஒப்புக்கொண்டதாக த டெலிகிராப் ஊடகம் தெரிவித்துள்ளது.

இரத்த உறைவு மற்றும் இரத்தில் காணப்படும் குருதிச் சிறு தட்டுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இது மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே நடக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும், இது குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## காசாவில் போ...

## ஹமாஸை வலியு...

(வோஷிங்டன்)

இஸ்ரேல் முன்வைத்துள்ள போர் நிறுத்... ஒப்புதல் அளிக்க வேண்டும் என ஹமாஸ் அ... வுத்துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன்... விடுத்துள்ளார்.



காசா விவகாரம் தொடர்பாக மேற்கு ஆசிய நாடுகளில் மீண்டும் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

"காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான செயற்திட்டத்தை ஹமாஸ் அமைப்பினரிடம் இஸ்ரேல் வழங்கியுள்ளது. அந்த செயற்திட்டத்தில் இஸ்ரேல் அரசு இதுவரை இல்லாத தாராள மனதுடன் அம்சங்களை இடம்பெறச் செய்துள்ளது.

இந்தச் சூழலில், போர் நிறுத்தத்துக்கும் காசா மக்களுக்கும் இடையே மறித்து நிற்பது ஹமாஸ் அமைப்பினர் தான். எனவே, இந்த விவகாரத்தில் ஹமாஸ் உடனடியாக முடிவெடுத்து இஸ்ரேலின் செயற் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

காசா போர் நிறுத்தம் தொடர்பாக ஒரு நல்ல முடிவை ஹமாஸ் அமைப்பினர் வெளியிடுவார்கள் அது இந்தப் போரின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது" என அவர் தெரிவித்தார்.

இதேவேளை போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் செயற்திட்டத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்பாட்டாளர்கள் என்று பிரிட்டன், எகிப்து ஆகிய நாடுகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கா
சண்
ற்கா
வழா
யுவ
கேம
மு
த்தம்
செயற
செய்
யாக
பான
ப்பட
அலை
அல்-
இ
கடல்
னர் ச
நுழை
மேற்
செய்
பேசு
பிலை
சென்
அ
ப்பின
கொ
கலை
இஸ்
கவுப
தாக்
இ
ற்பிய

## மெக்சிகோவில் பயணிக...

### 14 பேர் உயிரிழப்பு

(மெக்சிகோ)

மெக்சிகோவில் 45 பேரை ஏற்றிச்சென்ற சொகுசு பேருந்துஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 31 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டின் குவானஜூடோ மாகாணம் சன் லூயிஸ் டி லா பெஸ் நகரில் இருந்து மத்திய மெக்சிகோ மாகாணத்தில் உள்ள மனிநல்கோ நகருக்கு பயணித்த பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்து, கெப்லுன் - ஷல்பா நகர் இடையேயான அதிவேக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து

விபத்
கப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# போர் நிறுத்தம்

## ...யுறுத்தும் அமெரிக்கா

**...நிறுத்த செயற்திட்டத்துக்கு உடனடியாக ...ாஸ் அமைப்பினரிடம் அமெரிக்க வெளியுற ...ரிங்கன் நேற்று முன்தினம் கோரிக்கை**

காசாவில் 40 நாட்களுக்கு சண்டையை நிறுத்திவைப்பதற்கான செயற்திட்டத்தை இஸ்ரேல் வழங்கியுள்ளதாக பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் கேமரூன் தெரிவித்தார்.

முன்னதாக, காசா போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் செயற்திட்ட அம்சங்களை ஆய்வு செய்துவருவதாகவும், முழுமையாக பரிசீலித்த பிறகு இது தொடர்பான தங்கள் பதிலை தெரியப்படுத்தப்போவதாகவும் ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் கலீல் அல்-ஹய்யா கூறியிருந்தார்.

இஸ்ரேலுக்குள் தரை, வான், கடல் வழியாக ஹமாஸ் படையினர் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி நுழைந்து 1,200 இற்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்தனர். அத்துடன் சுமார் 240 பேரை அங்கிருந்து அவர்கள் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.


அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கொள்ளவும், பிணைக் கைதிகளை மீட்பதாகவும் சூளுரைத்த இஸ்ரேல், காசாவில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், சர்வதேச முயற்சியின் பலனாக இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட 7 நாள் போர் நிறுத்தத்தின் போது இஸ்ரேல் சிறைகளில் இருந்து 240 பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுக்குப் பதிலாக இஸ்ரேலில் இருந்து பிணைக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 105 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது.

எனினும், போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடங்கியது.

அதன் பிறகு மீண்டும் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக சர்வதேச நாடுகளின் முன்னிலையில் நடைபெற்ற பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிந்தன.



இந்த நிலையில், காசாவில் 6 வார போர் நிறுத்தம் மேற்கொள்ளவும் அப்போது இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளுக்குப் பதிலாக 40 நோயுற்ற இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவிக்கவும் இரு தரப்பு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்காக எகிப்து தலைநகர் கெய்ரோவில் இந்த மாதம் பேச்சுவார்த்தை தொடங்கியது.

அந்தப் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக இஸ்ரேல் வழங்கியுள்ள போர் நிறுத்த செயற்திட்டத்தைப் பரிசீலித்துவருவதாக ஹமாஸ் அமைப்பு தற்போது அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ...ரிகள் பேருந்து விபத்து



விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த பயணிகளில் 14 பேர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளடன் மேலும் 31 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்தை அறிந்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ‘ஹாரி பாட்டர்’ மாளிகை மீது ரஷ்யா திடீர் தாக்குதல்



(கீவ்)

உக்ரைனில் “ஹாரி பாட்டர் மாளிகை” என்று அழைக்கப்படும் ஒடேசாவில் உள்ள பாரம்பரிய கட்டடம் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் ஹாரி பாட்டர் மாளிகையானது பலத்த சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 4 பேர்உயிரிழந்துள்ளதாகவும், 32 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உக்ரைனிய சட்டமியற்றுபவர்க்கு சொந்தமான இந்த மாளிகை பின்னர் ஒடெசாவின் சட்டப் பள்ளியாக செயற் பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தென்சீனாவில் சூறாவளி

## 5 பேர் பலி, 141 கட்டடங்கள் சேதம்



(பீஜிங்)

தென் சீனாவில் உள்ள மிகப்பெரிய துறைமுக நகரமான குவாங்சோவில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் பாரிய சூறாவளி தாக்கியுள்ளது.

இதன்காரணமாக குவாங்டாங் மாகாணத் தலைநகரில் கடுமையாக மழை பெய்துவரும் நிலையில் ஆலங்கட்டி மழையினால் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதோடு, 33 பேர் காயமடைந்தனர்.

மொத்தம் 141 தொழிற்சாலை கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூறாவளி மணிக்கு 2.8 கிலோமீற்றர் வேகத்தில் வீசியுள்ளதோடு, பிற்பகல் 3 மணியளவில் அதிகபட்சமாக வினாடிக்கு 20.6 மீற்றர் வேகத்தில் வீசியதாக குவாங்சோவின் பையுன் மாவட்டத்தில் உள்ள லியாங்டியன் கிராமத்தில் உள்ள வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

குவாங்டாங் மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளத்தில் சிக்கி பல நகரங்களில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்ததோடு, பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். குறைந்தது 10 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்கூட்டியே பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை, ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளி குறித்து எச்சரிக்கைகளை வெளியிட்டப்பட்டிருந்தது.

செங்செங் மற்றும் பன்யுவின் குவாங்சோ மாவட்டங்களின் பெரியளவிலான ஆலங்கட்டி மழை பெய்து வாகனங்களை சேதப்படுத்தியுள்ளது.

பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான குவாங்சோவின் விமான நிலையத்தில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடெங்கும் தாவரங்களில் கறுப்புப் பூஞ்சணம்: பாதிப்பு அதிகம் இல்லை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வறண்ட வானிலை. வாட்டியெடுக்கும் அனல் காற்று. அவ்வப்போது மனமிரங்கி தருணம் பார்த்து கொட்டுவது போல மழை பெய்தது போலிருக்கும். உடனடியாகவே நிலம் காய்ந்து விடும். ஆனாலும் தாவரங்களுக்கு ஆறுதல் தந்தது போல ஆங்காங்கே அள்ளித் தெளிக்கின்றது. இந்த நிலை இப்படியே செப்டெம்பர் மாதம் வரையென எதிர்வு கூறல்கள் வந்து கொண்டேயிருக்கின்றது. என்ன செய்வது என தெரியாது பலரும் அங்கலாய்த்துக் கொணடிருக்கின்றனர்.

வீடுகளில் உள்ள தாவரங்களின் மேற்பரப்பில் ஒரு வகையான கறுப்புப் பூஞ்சணம் வளர்ந்திருப்பதனைக் கண்ட மக்கள் இது பற்றி அறிய விரும்பியதால் இந்த தகவல்கள் தரப்பட்டுள்ளன. இந்த கறுப்பு பூஞ்சணம் சாறு உறுஞ்சும் பூச்சிகளால் வெளிவிடப்படும் ஒரு வகையான தேன் சுரப்பில் வளர்வது ஆகும். சாறு உறுஞ்சும் பூச்சிகளான வெண் ஈ, செதில் பூச்சி, மாவுப்பூச்சி, அழுக்கணவன் மற்றும் இலைத்தத்தி ஆகியனவற்றினால் வெளியிடப்படும் ஒரு வகை பதார்த்தமே இந்த தேன் சுரப்பு.

சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாம் உறுஞ்சும் தாவரச் சாற்றின் 50 சதவீதத்தையே தமது தேவைக்காக பயன்படுத்திக் கொள்கின்றன. மீதியான 50 வீதமான சுரப்பை அவை தேன் சுரப்பாக மாற்றி வெளிவிடுகின்றன. இவ்வாறாக வெளிவிடப்படும் தேன் சுரப்பில் மேற்கூறிய கறுப்புப் பூஞ்சணம் தொற்றுதலாகி வளர்ந்துவிடும். அதிகமான தேன் சுரப்பு வெளிவிடும் போதும் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போதும் அதிக தேன் சுரப்பு வெளியிடப்படுவதனால் அந்த தேன் சுரப்புகள் கீழுள்ள இலைகளில் தண்டுகளில் படிகின்ற போது அதில் கறுப்புப் பூஞ்சணம் தொற்றுதாலாகின்றது. தேன் சுரப்பு இனிப்புத் தன்மையுடையதாக இருப்பதனால் கறுப்பு வளியிலுள்ள பூஞ்சணத்தின் வித்திகள் விழுந்து முளைக்கின்றன.

கறுப்புப் பூஞ்சணம் கப் நோடியம் என்னும் வகையினதாகும். இந்த பூஞ்சணம் பல்வேறுபட்ட வெப்பநிலைகளை தாக்குப் பிடிக்கும் தன்மையுடைதாகும். அத்துடன் பரந்து வளரும் கறுப்புப் பூஞ்சணம் தென்னையில் தொற்றுதலாகியிருக்கும் வெண் ஈயினால் வெளியிடப்படும் தேன் சுரப்பில் வளர ஆரம்பிக்கின்றது.


தென்னை உயரமான மரமாக இருப்பதனால் அதிலிருந்து விழும் தேன் சுரப்பு கீழுள்ள மற்றைய மரங்களின் இலைப் பரப்புக்கள், காய்கள், கனிகள் என்பனவற்றின் மேலும் விழுந்து படிகின்றது. அதில் கறுப்புப் பூஞ்சணங்கள் வளர்வது பரந்து வட்ட அளவில் இப் பூஞ்சணத்தினால் தொற்றுதலுக்குள்ளாகி அதிகரித்த சுட்டெரிக்கும் வெப்ப நிலையிலும் தாக்குப் பிடிக்கின்றதென்றால் இதனது வீரியத்தை என்னவென்பது.

தாவரங்களில் பரந்துபட்ட அளவில் ஒரு படையாக வளரும் கறுப்புப் பூஞ்சணம் இலகுவாக அனைத்து சிற்றிலைகளின் மேற்பரப்பிலும், வாழையாயின் அனைத்து மேற்பரப்பிலும் வளர்கின்றது. தென்னை உயரமான மரமாக பழங்கள் இருப்பதனால் அதிலிருந்து வெளியேறும் தேன் சுரப்பு கீழுள்ள அனைத்து தாவரங்களிலும் படிந்து வீடு முழுவதுமே வளரத்தொடங்கி விடும். இந்தப் பூஞ்சணத்தின் வளர்ச்சியால் மனிதனுக்கு நேரிடையான பாதிப்பு எதுவும் இல்லையெனக் கண்டறிந்தாலும் சுவாசக் கோளாறு உள்ளவர்களுக்கு சாதகமானதாக இல்லை.

இலைப் பரப்புகளில் வளரும் இக்கறுப்புப் பூஞ்சணத்தினால் ஒளித்தொகுப்பு பாதிக்கப்படுவதுடன் தாவரங்கள் சோபையிழந்து, மஞ்சள் நிறமாகி பார்ப்பதற்கு நோய்வாய்ப்பட்டதை நினைவுபடுத்துகின்றது.

மற்றைய காய்கள் கனிகளில் இந்நோய்கள் பரவத்தொடங்கிவிடும். அனைத்து தாவரங்களிலும் விழுந்த தேன் சுரப்பிலே இப் பூஞ்சணம் வளர்வதனால் இவற்றை சமாளிப்பது சிரமமாக இருக்கின்றது. இக் கறுப்புப் பூஞ்சணத்தின் வித்திகள் அதிகளவில் காற்றில் காணப்படுவதனால் சுவாச நோய் உள்ளவர்களுக்கு தகு இப்பூஞ்சணத்தின் வித்திகள் ஒவ்வாமை தன்மையை ஏற்படுத்தும் தன்மையுடையது.

மேலும் மனிதருக்கோ அல்லது கால்நடைகளுக்கோ இப் பூஞ்சணம் தொற்றுதலாக இல்லாதிருப்பதனால் எதுவித பின் விளைவுகளும் இல்லை. ஆனாலும் இதனுடன் மிகவும் அவதானமாக இருத்தல் அவசியமானதாகும்.



# இன்று ஒரு தகவல் 110



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## படிப்பும் – பண்பாடும்

ஒரு ஊரிலே சோமநாதர் என்று ஒரு பெரியவர் இருந்தார். மிகவும் நல்ல மனிதன்.அவரிடம் பணம் இருந்தது. அதோடு குணமும் இருந்தது. அது மிகவும் அபூர்வம் தானே! தர்ம சிந்தனை உள்ளவர்.

நாலு பேருக்கு நம்மாலே முடிந்ததை செய்ய வேண்டும் என்று நினைக்கின்றவர். அவர் என்ன செய்தார் தெரியுமா? இரண்டு பண்டிதர்களை வீட்டிற்கு கூப்பிட்டு கௌரவிக்க வேண்டும் என்று நினைத்தார். ஞான பண்டிதர் என்று ஒருவர்.

இராம பண்டிதர் என்று ஒருவர். அவர்கள் இரண்டு பேரையும் பார்த்து கொஞ்சம் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சரி என்று ஒத்துக் கொண்டார்கள். ஒருநாள் இரண்டு பேருமே வந்துவிட்டார்கள். இந்தப் பெரியவர் அவங்க இரண்டு பேரையும் மிகவும் அன்பாக வரவேற்றார். கூப்பிட்டு உட்கார வைத்தார்.

விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அதற்குள்ளே அந்த இரண்டு பண்டிதர்களிலே ஒருவன் நான் முதலிலே போய் குளித்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டார். அவர் புறப்பட்டு போன பின்பு உட்கார்ந்திருந்த இன்னொருத்தரிடம் சோமநாதர் பேச்சுக் கொடுத்தார்.

இப்போது குளிக்க போயிருக்கிறாரே உங்கள் கூட்டாளி ஞான பண்டிதர் அவர் பெரிய வித்துவான், தத்துவ ஞானி, என்று ஊர் உலகமெல்லாம் பேசிக்கொள்கிறார்களே! என்றார்.

அப்படி அவரைப் புகழ்ந்து பேசியதை இவராலே சகிக்க முடியவில்லை "ஊர் உலகத்துக்கு என்ன தெரியும் அவரைப் பற்றி! அவர் ஒரு பெரிய வித்துவான் என்று சொல்லிக்கிற அளவுக்கு அவரிடம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையே! எல்லாம் வெறும் வேஷம்! உண்மையைச் செல்லப்போனால் அது ஒன்றும் தெரியாத மாடு! என்று பொரிஞ்சு தள்ளிப்போட்டார். அந்த பெரிய மனிதன் இவர் இப்படிச் சொல்லுவார் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை! மனம் நொந்துபோய் பேசாமல் உட்காந்திருந்தார்.

கொஞ்ச நேரத்தில் குளிக்கப் போயிருந்த ஞான பண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்ததும் ராமபண்டிதர் குளிக்கப் புறப்பட்டார். இவர் போன பின்பு ஞானபண்டிதரிடம் பேச்சுக் கொடுத்தார் சோமநாதர். "ஏங்க.. உங்க கூட்டாளி பெரிய ஞானி போல இருக்கிறாரே? என்றார். இதைக் கேட்டதும் அவர் முகம் வாடிப் போச்சு! " யாருங்க ஞானி! அவரா – ஞானி அவரைப் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியாது போல இருக்கு! அது ஒரு மோசமான கழுதை! என்றார்.

இதை கேட்டதும் அந்த பெரிய மனிதன் இன்னமும் நொந்து போனார். பதில் எதுவும் சொல்லவில்லை! பேசாமலே இருந்தார்.

சாப்பாட்டு நேரம் வந்தது! குளிக்கப் போனவரும் வந்து சேர்ந்தார். அந்தப் பெரியவர் இவர்கள் இரண்டு பேரையும் கூப்பிட்டு உட்கார வைத்தார். அவர்களுக்கு முன்னால் தட்டை வைத்தார். ஒரு தட்டிலே புல்லு, ஒரு தட்டிலே தவிடு கொண்டு வந்து வைத்தார்.

இதைப் பார்த்தவுடனே அந்தப் பண்டிதர்களுக்கு கோபம் வந்து விட்டது. "எங்களை என்ன மிருகம் என்று நினைத்து விட்டீர்களா? எங்களை இப்படி அவமானப்படுத்துவதற்கா உங்க வீட்டுக்கு கூப்பிட்டீங்க? என்று சொல்லி சத்தம் போட ஆரம்பிச்சுட்டாங்க!

"அய்யய்யோ... அப்படியெல்லாம் நினைத்து விடாதீர்கள். நீங்கள் இரண்டு பேரும் பண்டித மணிகள் உங்க வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன். அவ்வளவுதான்! நீங்க தான் அவரை மாடு என்றீர்கள்! அவர் தான் உங்களை கழுதை என்றார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத்தான் உங்கள் முன்னால் வைத்தேன்.

முதலில் நான் உங்களை பண்டிதர்கள் என்று நினைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்தேன். நீங்கள் இங்கே வந்த பிறகுதான் நீங்கள் யார் என்பதை உங்கள் மூலமாகவே புரிந்துகொண்டேன்! அதன்பின்பு அதற்குத் தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு செய்தேன்! அவ்வளவுதான்! என்றார்.

இந்த உலகிலே நாம் எல்லாம் அதிகம் படித்தால் மட்டும் போதாது! பண்பாடு வேணும். அது தான் முக்கியம். அதை புரிந்து கொள்வதற்கு தான் இந்தக் கதை.

இப்பவும் நம்மில் பல பேர் அடிக்கடி மிருகங்களைச் சம்மந்தப்படுத்திப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள். "உன்கூட நான் சினேகிதம் வைத்ததற்குப் பதிலாக ஒரு எருமை மாட்டிடம் சினேகிதம் வைத்திருக்கலாம்! என்றார் ஒருத்தர். "வைத்திருக்கலாம்! ஆனா அதுக்கு எருமை மாடு சம்மதிக்க வேண்டுமே! என்றார் அடுத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கடற்கரை கபடி போட்டி சம்பியனான யாழ்.மாவட்ட அணி



(யாழ்ப்பாணம்)


வடமாகாண கடற்கரை கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாவட்ட அணிகளுக் கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ் ளமாவட்ட அணியை எதிர்த்து மன்னார்மாவட்ட அணிமோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ் மாவட்ட அணி 51:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். (நி-6-90)

# தர்ப்பூசணி, நுங்கு விற்பனை அமோகம்



(மன்னார்)

நாடளவிய ரீதியில் நிலவி வருகின்ற கடும் வெப்பமான காலநிலைகாரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர் வெப்பத்தின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் மன்னார் மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கத்தை சமாளிப்பதற்கு தர்ப்பூசணி மற்றும் நுங்கு கொள்வனவுகளில் பொதுமக்கள் அதிகம் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

உள்ளூர் சந்தைகளில் தர்ப்பூசணிகளின் விலை சடுதியாக குறைந்துள்ள நிலையில் மக்கள் அதிகளவான தர்ப்பூசணிகளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

அதே நேரம் நுங்கு, சர்பத் போன்ற இயற்கையான பானங்களையும் பருகி வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மன்னார் நகர்ப் பகுதியில் பல இடங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபரிகளால் தர்ப்பூசணி விற்பனை இடம்பெற்று வருகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது.(நி-285)




# அம்புலன்ஸை வழிமறித்து யானைகள் அட்டகாசம்



(வவுனியா)

வவுனியாசெட்டிகுளம் ஊடாக மன்னார் செல்லும் பிரதான வீதியில் யானைகள் வீதியை குறுக்கறுத்து அட்டகாசம் செய்கின்றன

பறையனாளங்குளம் பகுதியிலேயே இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக யானைகள் வீதியில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு செய்து வருகின்றன.கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் இதே பகுதியில் பல மின்கம்பகளை உடைத்து சேதமாக்கியிருந்தன.

இந்நிலையில் நேற்று நோயாளர்களை ஏற்றிச் சென்ற நோயாளர் காவு வண்டியையும் வழிமறித்ததுடன் நீண்ட நேரமாக போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் யானைகள் நின்று பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்துள்ளன. (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3104

**யஸ்மிகா**




**பிரநிஷா**




**சுபாஷ்**





**காருணிகா**




**கமல்**




**திசா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். இவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 469





"ஆகா! இது என்ன? இன்னொரு உட்கலகமா?" என்றார் இளவரசர்.

படகுக்காரன் திடீர் என்று இளவரசர் காலில் விழுந்தான். "இளவரசே! தெரியாமல் பாதகம் செய்துவிட்டேன். பணத்தாசையால் செய்துவிட்டேன் மன்னிக்க வேண்டும்!" என்று கதறினான்.

"இது என்ன? பூங்குழலி! எல்லோருமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கிவிடு வார்கள் போலிருக்கிறதே? நீயாவது விஷயம் என்னவென்று சொல்லக்கூடாதா?"

"இளவரசே! இத்தனை நேரம் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு சொல்லவில்லை. இவன் என் தமையன், தங்களைக் கொல்லுவதற்காக வந்த இரண்டு பாவிகளையும் இவன்தான் கோடிக்கரையிலிருந்து படகில் ஏற்றிக் கொண்டு வந்தான். அவர்கள் சொற்படியேதான் இவன் இதுவரை இங்கே காத்துக் கொண்டிருந்தான். அவர்களை இன்று காலையில் மறுபடியும் படகில் ஏற்றி நாம் பார்த்த கப்பலில் கொண்டு போய் விட்டானாம்! தங்கள் நண்பரும் அதிலேதான் ஏறியிருக்கிறார்" என்றாள்.

"பிரபு! என்னை வெட்டிக்கொன்று விடுங்கள்! அவர்கள் அத்தகைய துஷ்டர்கள் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் செய்திருக்க மாட்டேன். என்னைத் தங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்!" என்றான் படகுக்காரன்.

"அப்பனே! இச்சமயம் உன் உயிர் எனக்கு விலை மதிப்பில்லாத பொருள். வா, போகலாம்! அந்தக் கப்பலிலேயே என்னையும் கொண்டுபோய் ஏற்றிவிடு. எனக்கு நீ செய்த கெடுதலுக்கு அதுதான் பரிகாரம். புறப்படு, போகலாம்!" என்றார் இளவரசர்.

கடற்கரையோரத்தில் சென்றதும் கரையில் கிடந்த படகைப் படகோட்டி தண்ணீரில் இழுத்து விட்டான். இளவரசர் கடலைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதோ கப்பல் இன்னும் தெரிகிறது! பிடித்து விடலாம்!" என்றார்.

சேனாதிபதியும் தூரத்தில் தெரிந்த கப்பலைக் கூர்ந்து பார்த்தார்.

"இளவரசே! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!" என்றார்.

"என்ன என்ன? தங்களிடமிருந்து கூட நல்ல வார்த்தை வருகிறதே!"

"நம் கண்ணுக்குத் தென்படுவது தாங்கள் நினைக்கிறபடி வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பல் அல்ல. பார்த்திபேந்திரனுடைய கப்பல். திரிகோண மலைப்பக்கமிருந்து வருகிறது. நாம் இருக்கும் திசையை நோக்கி வருகிறது. தெரியவில்லையா?"

"ஆம், ஆம்! அப்படியானால் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. பார்த்திபேந்திரர் வேறு ஏதோ நோக்கத்துடன் வருகிறார்.


ஆயினும் நல்ல சமயத்தில் வருகிறார். சிங்கத்தைக் கொண்டே சிறுத்தையை வேட்டையாடலாம்! ஆனால் அந்தக் கப்பல் இங்கே வரும் வரையில் நான் காத்திருக்கப் போவதில்லை. படகில் சிறிது தூரம் சென்று எதிர்கொள்கிறேன்."

"இளவரசே! தங்களுடன் படகில் வருவதற்கு"

"ஐயா நீங்கள் ஒருவரும் என்னுடன் வரவேண்டியதில்லை. இங்கேயே நின்றால் எனக்குப் பெரிய உதவி செய்ததாக எண்ணிக்கொள்வேன். திருமலை! உனக்குங் கூடத்தான் சொல்கிறேன். உனக்குத்தான் கடல் என்றால் தயக்கமாயிற்றே?"

"ஆம், ஐயா! நானும் பின் தங்குவதாகவே இருந்தேன். இலங்கைத் தீவில் இருக்கும் வரையில் தங்களைப் பார்த்துக்கொள்ளும்படிதான் எனக்குக் கட்டளை. முதன் மந்திரி மதுரையில் இருக்கிறார். அவரிடம் போய் இங்கு நடந்தவற்றைச் சொல்ல வேண்டும்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## துன்பம்



பல படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனை. அவற்றில் ஒரு அறையில் இரு தீவிர நோயாளிகள். ஒருவரை இன்னொருவர் பார்த்தது இல்லை. இருவருக்குமிடையே ஒரு தடுப்புச் சுவர். ஒருவர் படுக்கை ஜன்னல் அருகில். இன்னொருவருக்கு ஜன்னல் கிடையாது. எப்போதாவது வந்து செல்லும் மருத்துவச் செவிலியைத் தவிர தனிமை.. தனிமை.. தனிமை..!

ஜன்னல் படுக்கை நோயாளிக்கு புற்று நோய். இன்னொருவர் கடும் எலும்பு முறிவு நோயாளி. நாளடைவில் நட்பாகிவிட்டனர். ஒருமுறை எலும்பு நோயாளி ஜன்னல் நோயாளியிடம் சொன்னார்.

"உனக்காவது பொழுது போக்க, ஒரு ஜன்னல் இருக்கிறது. எனக்கு அதுகூட இல்லை..!"

கவலைப்படாதே நண்பா.. நான் ஜன்னலூடே என்னென்ன காண்கிறேனோ, அவ்வளவையும் உன்னிடம் விவரிக்கிறேன். இதை ஒரு ஒப்பந்தமாகவே கடைப்பிடிப்பேன்..!

அன்று முதல் ஜன்னல் நோயாளி, தான் கண்ட காட்சிகளை சுவைபட தன் நண்பனுக்குக் கூறலானார்.. நண்பா.. இன்று ஜன்னலுக்கு வெளியே ஒரு பெரிய ஏரி.. நடுவில் சிறு தீவு.. ஏரியில் படகுகள் மிதக்கின்றன.. ஏரிக்கரையில் அழகான பூங்கா..! காதலர்கள் தன்னை மறந்து கதைகள் பேசுகின்றனர்..!"

எலும்பு நோயாளிக்கு அப்படியே காட்சிகள் மனக்கண்ணில் விரி... இன்னொரு நாள் சொல்வார்..

"ஏரிக்கரை ஒரமாக ஒரு சாலை.. அதில் மணப்பெண் அழைப்பு ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது. குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஓடித் திரிகின்றன. மணப்பெண்ணிடம் தோழி ஏதோ சொல்கிறாள்.. மணப்பெண் முகத்தில் அப்படி ஒரு வெட்கம்..!"

ஊர்வல அரவங்கள் எதுவும் எலும்பு நோயாளிக்கு கேட்கவில்லையாயினும் நாதசுரமும், தவிலும் ஒலிக்க ஊர்வலம் போகும் காட்சியை நன்கு அனுபவிப்பார். ஒரு நாள் ஜன்னல் நோயாளி செத்துப் போனார்.

மீண்டும் எலும்பு நோயாளிக்கு வெறுமை ஒரு நாள் செவிலி வந்த போது, தன் படுக்கையை ஜன்னல் ஓரமாக மாற்றித்தரும்படி கேட்டுக்கொள்ள, அவ்வாறே செய்யப்பட்டது.

இனி எனக்கு நன்கு பொழுது போகும் என்று எண்ணியவாறே.. தன் எலும்பு முறிவு வலியையும் பொருட்படுத்தாமல் மெல்ல தன் உடலை உயர்த்தி ஜன்னல் வழியே நோக்க. அங்கே பெரிய சுவர்..! வேறு எதுவுமே இல்லை..!

அப்படியானால் ஜன்னல் நோயாளி சொன்ன கதைகள்?

மறுநாள் செவிலி வந்தவுடன், நடந்தவற்றை எலும்பு நோயாளி கூறினார். செவிலி, எலும்பு நோயாளிக்கு ஊசி மூலம் மருந்தை ஏற்றியபடியே சொன்னாள்.

நீங்கள் பார்க்கும் சுவர் கூட அவருக்கு தெரிந்திருக்காது.. புற்று நோயின் தாக்கத்தால் அவர் பார்வையை எப்போதோ இழந்து விட்டிருந்தார்..!"

நீதி : தன் துன்பங்களை மறைத்துக் கொண்டும் உற்சாகப் படுத்தும் மிகச்சில மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.. அவர்களைப் போற்றாவிட்டாலும் பரவாயில்லை குறைகூறாதீர்கள்..!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வதைபடும் தொழிலாளர்கள் தடுக்கத் தவறும் சர்வதேசம்

தொழிலாளர்களின் உரிமையை நிலை நிறுத்திய மே மாதம் முதலாம் திகதியாகிய இன்றைய நாள் உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த உலகம் தொழிலாளர்களின் உழைப்பினால் இயங்குகிறது.

எனினும் ஆதிகால சமுதாயம் உழைப்பாளர்களை அடிமைகளாக நடத்தி, அவர்களின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டது.

ஆம், ஓய்வு உறக்கமின்றி நாள் முழுவதும் உழைக்கின்ற கொடுமைக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கம் மேற்கொண்ட புரட்சி அவர்களுக்கு விமோசனத்தைத் தந்தது.

இருந்தும் இன்னமும் தொழிலாளர் வர்க்கம் தனக்குரித்தான உரிமையை அனுபவிக்க முடியாமல் அவலப்படுகின்ற சம்பவங்களும் நடந்தாகின்றன.

அதிலும் குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்களாக – தொழிலாளர்களாகச் செல்கின்றவர்கள் அங்கு மிக மோசமாக நடத்தப்படுகின்றனர்.

இந்த நிலமை மத்திய கிழக்கு நாடுகள் முழுமையிலும் உண்டென நாம் கூறவில்லை.

ஆனால், மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலாளர்களாகவும் வீட்டுப் பணிப் பெண்களாகவும் செல்கின்றவர்களில் கணிசமானவர்கள் வதைபடுகின்றனர். அவர்களை, குறித்த முதலாளித்துவ வர்க்கம் அடிமைப் படுத்தியுள்ளது.

நாடுகளுக்கு நாடுகள் தூதுவராலயங்களும் உடன்படிக்கைகளும் இருக்கின்ற போதிலும் மறைமுகமாக தொழிலாளர்களை அடிமைப்படுத்துகின்ற அக்கிரமம் நடந்து கொண்டே இருக்கிறது.

ஆம், இந்தியத் தொழிலாளி ஒருவர் டுபாய் நாட்டில் ஆடு மேய்க்கின்ற தொழிலில் ஈடுபட்டதுடன் அவரை அடிமையாக நடத்திய மிகக் கொடூரமான உண்மைச் சம்பவம் **ஆடு ஜீவிதம்** (The Goat Life) என்ற திரைப்படமாக வெளிவந்திருந்தது.

அண்மையில் வெளிவந்த அந்தத் திரைப் படம், மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழிலாளர்களாகச் செல்கின்றவர்கள் படுகின்ற துன்பங்களை – அனுபவிக்கின்ற வேதனைகளை மிகத் தத்ரூபமாக எடுத்துக் கூறுகிறது.

ஆக, ஒருபுறத்தில் தொழிலாளர்களுக்கு உரிமை கிடைத்த நாளை மே தினமாக உலகம் கொண்டாடி நிற்கின்ற அதேநேரம், தங்களின் குடும்ப வறுமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றவர்கள் அங்கு எந்தவித மனிதநேயமுமின்றி அடிமைகளாக நடத்தப்படுவது மிகவும் வேதனைக்குரியது.

அதிலும் சட்டவரையறைகளில் மிகவும் இறுக்கமாக இருக்கக்கூடிய மத்திய கிழக்கு நாடுகளில், தொழிலாளர்கள் என்ற பேரில் மனித வதை இடம்பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே மே தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த உலகம் எங்கெல்லாம் தொழிலாளர் வர்க்கம் நசுக்கப்படுகிறதோ – எங்கெல்லாம் மனித வதை நடக்கிறதோ அதனை அங்கெல்லாம் தடுத்து நிறுத்தும்போதுதான் மே நாள் அர்த்தமுடைய தினமாக மாற முடியும்.

# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 40 மே தினக் கூட்டங்கள்

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, நாட்டின் அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் கொழும்பு உட்பட பல பகுதிகளில் பல மே தின கொண்டாட்டங்கள் மற்றும் அணிவகுப்புகளை ஏற்பாடு செய்துள்ளன.

இன்று சர்வதேச தொழிலாளர் தினத்திற்காக நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளால் நடத்தப்படும் மே தின கூட்டங்கள் மற்றும் பேரணிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

அவற்றில் 14 கொழும்பை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளன.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, முன்னிலை சோசலிசக் கட்சி உள்ளிட்ட பல சிவில் அமைப்புகள் கொழும்பில் தமது மே தின பேரணிகள், கூட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களில் இணைந்து கொள்ளவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த ஆண்டு மே தின பேரணியை நடத்தாத நிலையில், அதன் மே தின கூட்டம் பி.டி. சிறிசேன மைதானத்திற்கு எதிரே புதிய பிரதீபா மாவத்தை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

அதேபோல், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இந்த ஆண்டு மே தின பேரணியை நடத்தாத நிலையில், பொரளை கெம்பல் மைதானத்தில் தனது கட்சியின் மே தின கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, கொழும்பு கோட்டையைச் சுற்றியுள்ள பல வீதிகள் ஊடாக மே தின பேரணியை நடத்தவுள்ளதுடன், கீழ் சத்தம் வீதி பகுதியில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சி இவ்வருடம் லிப்டன் சுற்றுவட்டத்தில் தனது மே தின கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளதுடன், ஹெவலொக் வீதியில் இருந்து ஆரம்பிக்கும் கட்சியின் பேரணி தும்முல்லையை கடந்து கன்னங்கர மாவத்தை ஊடாக குறித்த இடத்தை சென்றடையவுள்ளது.

கொழும்பில் மே தினக் கொண்டாட்டங்களுடன் யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மே தினக் கொண்டாட்டங்களை கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டம் கம்பஹாவில் நடைபெறவுள்ளது.

இன்று சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பை சுற்றி நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் காரணமாக விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் 6,000 இற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவசர நிலை ஏற்பட்டால் இராணுவத்தினரை களமிறக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# இரண்டு மே தினக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இரண்டு மேதினக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று பல்வேறு அரசியல் கட்சிகளும் மேதினப் பேரணிகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இரண்டு இடங்களில் நடைபெறும் இருவேறு கட்சிகளின் மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அழைப்பை ஏற்று இன்று காலை 10.50 மணியளவில் கொட்டகலையில் நடைபெறும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மே தினக் கூட்டத்தில் முதலாவதாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு குறித்து முக்கிய அறிவிப்பொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் இன்று பிற்பகல் கொழும்பு, மாளிகாவத்தை மைதானத்தில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார். (ம-7,10)

## இடம் மாற்றப்பட்டது மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இல.01, 03 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிவந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றிலிருந்து இல.42 கோவில் வீதி, யாழ்ப்பாணம் (42,Temple Road, Jaffna) முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் [illegible]

புதிய அலுவலகமானது பிரதான வீதியிலிருந்து கோவில் வீதியில் 150 மீற்றர் தூரத்திலும், வைத்தியசாலை வீதியிலிருந்து பிரதான வீதியை நோக்கிய கோவில் வீதியில் 50 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது.

எனவே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் சேவைகளை பெறுவதற்காக மக்கள் மேற்படி முகவரியில் இருக்கும் புதிய அலுவலகத்தை நாட முடியும் என யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் [illegible] (ம-7,10)

## குடும்ப தகராறு 9 மாத குழந்தையை கிணற்றில் வீசிய தாய்

கம்பஹா – இராகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய தாய் ஒருவர் தனது ஒன்பது மாத குழந்தையை கிணற்றில் வீசி கொலை செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய குழந்தையின் தாய் மஹபாகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக குழந்தை தாயினால் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் வீசி கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த தாய் மனவுளைச்சல் காரணத்தால் இவ்வாறு செய்திருக்ககூடும் என தெரிவிக்கும் பொலிஸார், வைத்திய பரிசோதனைகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-7,10)

## குருப்பெயர்ச்சி பரிகார ஹோமம்


(யாழ்ப்பாணம்)

குரு பெயர்ச்சியினை முன்னிட்டு நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் அதிவிசேட குருப்பெயர்ச்சி ஹோமம் இடம்பெறவுள்ளது.

குருபகவானின் திருவருளை பெற்றுய்திடும் வண்ணம் இவ் ஹோமத்தில் அனைத்து பக்த அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.கா. துரைச்சாமிக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் டக்ளஸ்-எரிக்சொல்ஹெய்ம் கொழும்பில் திடீர் சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும் முன்னாள் நோர்வே அயலுறவுத்துறை அமைச்சருமான எரிக் சொல் ஹெய்ம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான செய்திகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் சாத்திய மான தீர்வை பெற்றுத்தரக்கூடிய வராக தேசிய ரீதியிலும் சர்வ தேச ரீதியிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இருக்கின்றார். அதை அவர் நிரூபித்தும் வருகின்றார்.

அந்த வகையில் தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருப்பதே நாட்டுக்கு நன்மையாக அமையும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்று அமைச்சர் தெரிவித்தார். (நி)

## குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை

(கொழும்பு)

குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்பட்ட குழுவை கூடிய விரைவில் சுகாதார சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு அரசாங்க குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக் குறை காரணமாக கடமைகளும் பாதிக்கப்படுவதாக அதன் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஏனைய குழுக்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு விரைவான தீர்வை வழங்குவது அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெடித்த துப்பாக்கியால் பரபரப்பு

### விமானப்படை வீரர் அதிரடியாக கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த விமானப் படை வீரரின் துப்பாக்கி வெடித்ததில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் முனையத்தில் நேற்று காலை கடமையில் ஈடுபட்டிருந்த இலங்கை விமானப்படை வீரர் ஒருவரின் துப்பாக்கி வெடித் ததில் முனையத்தின் கூரை சேதமடைந்துள்ளது.

இலங்கை விமானப்படையின் தலைமை விமானப் படையைச் சேர்ந்தவரிடம் இருந்த T-56 ரக துப்பாக்கி தவறுதலாக காலை 10.30 மணியளவில் வெடித்துள்ளது.

எனினும் இதனால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடமையில் இருந்த குறித்த விமானப் படை வீரர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில்,

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மற்றும் இலங்கை விமானப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில், பணம் செலுத்தி வசதிகளைப் பெறும் சிறப்பு விசேட விருந்தினர்கள் மற்றும் உலகின் முன்னணி வர்த்தகர்கள் இந்த முனையத்தின் ஊடாக அடிக்கடி பயணங்களை மேற் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மே தினம் உணர்த்தும் உண்மை

மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும் உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திய தினம்.

அமெரிக்காவில் 1890 ஆம் ஆண்டு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கம் அற்ற தாக்குதலை நடத்தியது. ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும் முதலாளிகள் உலக வரலாறின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி இதையெல்லாம் செய்வதற்கு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் கால் மார்க்ஸ். இவ்வாறு அவர் கூறி 42 ஆண்டுகள் உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தால் இந்த வெற்றி நிலைநாட்டப்பட்டது.

தொழிலாளர்களின் உழைப்பினால் தான் உலகமே இயங்குகிறது. தொழிலாளர்களின் உழைப்பு இன்றி எந்தப் பொருளும் உருவாவதில்லை என்பதை உணர்ந்தனர். தாம், விலங்குகளைவிட கீழ்த்தரமாக நடத்தப்படுவதையும், உழைப்பின் பலன்களை எல்லாம் அனுபவிக்கும் முதலாளிகள், தொழிலாளர்களை வறுமையிலும் துன்பத்திலும் இருக்கும் படி செய்கின்றனர் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராடினர்.



1886ஆம் ஆண்டு அமெரிக்க தொழில் நகரங்களான நியூயோர்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் தொடங்கியது. இந்த வேலை நிறுத்தத்தில் 1200 இற்க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. ரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராட்ட இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

இவ்வாறு உலகெங்கும் நடந்த போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவில் இதற்கான வெற்றியை அடைந்தனர். தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசு அவர்களின் கோரிக்கையை 1890 ஆம் ஆண்டு ஏற்றது. தொழிலாளர்களின் இந்த வெற்றியை குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாக மே தினம் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது. பொதுவுடைமைவாதி ம.சிங்கார வேலர் 1923ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவைக் கொண்டாடினர்.

இந்தியாவில் முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்து, தங்கள் உரிமையை அடைவதற்கான போராட்டம் இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. தொழிலாளர்கள் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றை கடந்து தொழிலாளர்கள் என்னும் உணர்வுடன் ஒன்றுபட்டு போராடினால் வெற்றி கிடைத்தே தீரும் என்பதை மே தின வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

கண்டியில் இருந்து யாழ்பாணம் நோக்கி பேருந்தில் பயணம் செய்துள்ளார்.

இதன்போது மேற்படி நபர் நீண்ட நேரம் அசைவற்றுக் காணப்பட்டதால் சந்தேகமடைந்து அவரை பரிசோதித்த நடத்துனர் மற்றும் சாரதி ஆகியோர் உடனடியாக அருகில் இருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இதன்போது அவரை பரிசோதித்த வைத்தியர்கள் ஏற்கெனவே அவர் உயிரிழந்ததனை உறுதிப்படுத்தியிருந்தனர்.

உயிரிழந்த நபர் தொடர்பான விபரங்கள் எவையும் இல்லாமையால் அவரை அடையாளம் காண முடியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,30)

## உயர் நீதிமன்ற...

நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நிராகரித்து, சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு பேரவை அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தெரிவித்து நபரொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி பி.பீ.எஸ்.எம். பதிரன வினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எஸ்.துரைராஜா, A.H.M.D.நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன் னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முறையான நடைமுறையை பின்பற்றாது, உயர் நீதிமன்றத்திற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட நீதியரசரின் பரிந்துரையை நிராகரித்த தன் மூலம், அரசியலமைப்பின் 12 ஆவது சரத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா? என்பதை விசாரணை செய்வதற்கு நீதியரசர்கள் குழாம் அனுமதி வழங்கியது.

மனு மீதான விசாரணைக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம், விசாரணை நிறைவடையும் வரை அமுலாகும் வகையில், இந்த இடைக் கால தடையுத்தரவை பிறப்பித்தது.

மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 04ஆம் திகதிக்கு திகதியிடப் பட்டுள்ளது. (ம-7,10)

## எரிபொருட்...

ஒன்றின் விலை 20 ரூபாயால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 420 ரூபாயாகும்.

அதேபோல், ஒரு லீற்றர் டீசலின் விலை 30 ரூபாயால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 333 ரூபாயாக குறைவடையவுள்ளது.

சூப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 9 ரூபாயால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 377 ரூபாயாகும்.

மேலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 215 ரூபாய் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-7,10)

## சொல்ஹெய்ம்...

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியிலுள்ள தப்ரபேன் கடலுணவு நிறுவனத்திற்கு ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட குழுவினர் நேற்று விஜயம் செய்தனர்.

இதன்போது அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டதோடு கடல் உணவு உற்பத்தி நடைபெறும் இடத்தையும் பார்வையிட்டு பணியாளர்களுடனும் கலந்துரையாடலில் இக் குழு ஈடுபட்டது.

இதன்போது ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வே பாராளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர் குலாட்டி ஹிமான்ஷு, தப்ரபேன் கடலுணவு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திமோதி ஓ'ரெலி உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். (ம-7,10)

## குளியலறையில்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த நபரின் வீட்டுக்கு வேலைக்குச் சென்றவர்கள் குறித்த நபர் குளியலறையில் சடல மாக இருப்பதை அவதானித்தனர். இந்நிலையில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

மானிப்பாய் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,10)

## 3 தனியார்...

மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

மூன்றுக்கு மேற்பட்ட விபத்துக்களை ஏற்படுத்தியமை, வீதியில் போட்டித் தன்மையில் பயணித்தமை போன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவ் பேருந்துகளின் வழித்தட அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளது. (ம-7,10,250)

## மகிந்தவை...

தெரிவித்துள்ளார்.

அங்கு இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட முடிந்ததாக அவர் மேலும் கூறினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க ஆகியோரும் இதன்போது பிரசன்னமாக இருந்ததாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,10)

## வடக்...

தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ். மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தின நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு வவுனியா, குருமன்காடு, கலைமகள் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம், கொக்குவில் - பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய மண்டபத்தில் (பொற்பதிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த உலகத் தொழிலாளர் தின நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மே தினத்தைச் "சுற்றுச்சூழல் பாதுகாப்பே உழைப்புக்கான உத்தரவாதம்" என்ற கருப்பொருளில் செம்பசுமை மே தினமாகக் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தின நிகழ்வு பருத்தித்துறை கூட்டுறவு மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 5461
N 7 1 8 7 3 7
அத சம்பத
N 8 7 3 7
சீட்டிழுப்பு இலக்கம் 036

தன நிதானய
திகதி - 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1491
S 35 36 41 65 S
12846

மெகா பவர்
திகதி 30/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1809
B 18 23 56 57 68
06801

லக்கி 7 VIP
திகதி 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 0287
N 3 2 6 9 8 5 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3703
சீட்டிழுப்பு திகதி 30.04.2024
E 06 32 39 42
E
50412

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 0770
துலாம் 09 25 37 44 துலாம்
58669 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.04.2024 வெற்றி வாரம் 169 வர்ணம் சிவப்பு
P 2 2 4 7 2 2
50543 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,410,840.00

SUPER BALL
2435 30.04.2024 செவ்வாய்
49 53 70 74 W
49601
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,895,681.60

சனிதா
திகதி 2024.04.30 வெற்றி வாரம் 4596 வர்ணம் பச்சை
08 43 51 65 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,385,260.80
45704

சசிரி
471
2024.04.30
உவதா
09 12 31
07
ரூ.3,015,200/-
57036

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4147 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.04.30 தினம் செவ்வாய்க்கிழமை
13 44 57 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,358,311.60
718958

R 37 03 17 29 33
1611
326290
30.04.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 520,109,544.20

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2261
சீட்டிழுப்பு திகதி : 2024.04.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.109,604,385.60
09 19 28 36 R
362120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (623)

**074 17 37 684**



## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111** (511)

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.



## சிறப்புப் பட்டிமன்றம்

நடுவர் நெல்லை சுப்பையா
இந்தியாவிலிருந்து சிறப்பு விருந்தினராக நடிகர் பாண்டியராஜன் கலந்து கொள்ளும் 05.05.2024 அன்று சுண்டிக்குளி விஜய் கொம்பளக்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனுமதிக் கட்டணம் - 1000/= (624)

**077 651 0375**


## சம்பிக்கவிடம் விசாரணை

(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்தில் இடம்பெற்ற அரசியல் கூட்டமொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்து தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் நேற்று சம்பிக்கவிடம் வாக்குமூலங்களை ஏறக்குறைய இரண்டு மணிநேரம் பதிவு செய்தது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சதி உள்ளதா என குற்றப் புலனாய்வு திணைக்களம் தன்னிடம் கேட்டதாக பாடலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (ம-7.10)


## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0242)



## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து (C-0242)

V2 GUEST 0743900360, 0743900361



## வாழ்வதற்கு சிறந்த நாடு Denmark வேலை வாய்புகள் ...

Doctors(வைத்தியர்கள்), Nurses(தாதியர்கள்), SLMC, SLNC Registration, இரண்டு வருட வேலை அனுபவம் தேவை.

Call - 077 768 7821
Unicorn Facilitators Pvt Ltd
Nallur, Jaffna. (630)



## காணி விற்பனைக்கு

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலுக்கு அருகாமையில் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (608)

**076 742 4301**
**075 710 9639**



## காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் நல்ல சூழலில் நான்கு பக்கமும் சுற்றுமதிலுடன் அமைந்துள்ள சதுரக் காணி உடன் விற்பனைக்கு.

விலை - 1 கோடி 80 இலட்சம்
காணி அளவு - 1 1/2 பரப்பு (617)

**075 159 7025**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**சிறிகாந்தராசா சிறிசங்கர் (B.Sc, M.Sc)**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம்)

அவர்கள் 30.04.2024 அன்று நீதிபதி டி.எஸ் சூசைதாஸ் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக பதவி ஏற்றுக் கொண்டதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சர்வன் - பவா
சஜீவன், சஞ்ஜேவன்
(ஆசிரியர்கள்)
103/1, கோவில் வீதி, நல்லூர். (C-0243)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

பொற்பதி - கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலை மற்றும் சமையல் வேலை செய்யக் கூடிய 35 - 50 வயதுடைய பணிப்பெண் தேவை. (607)

**071 894 9131**




## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வு வீதியில் 3 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (606)

**070 382 4074**


# மரண அறிவித்தல்



மலர்வு 03.12.1946
உதிர்வு 27.04.2024

## சின்னத்தம்பி தங்கவடிவேல்

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கவடிவேல் அவர்கள் 27.04.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தேவமலரின் அன்புக் கணவரும் தயாகரன், தயாளினி, சுபாஸ்கரன், சுதாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, புவனேஸ்வரி, திருச்செல்வம், வாமதேவன் மற்றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுபத்திராதேவி மற்றும் ஜான்சிக்கா(பிரான்ஸ்), சிபெற்றா(பிரான்ஸ்), ராஜ்கபூர், ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருஜன், தஷானிக்கா, கிருத்திக்கா, கிறிஷ் (ஆகியோர் பிரான்ஸ்), கனுஷ்ரன், அபிசயன், சஞ்சயன் மற்றும் சுருதி, சறன், சமிறன் (ஆகியோர் பிரான்ஸ்), பவிசங்கர், சாணுப்பிரிஜன், தரணீகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தெய்வேந்திரம் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், செல்லையா, பழனி, செல்வராணி மற்றும் இராசம்மா (பிரான்ஸ்), சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.05.2024 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 9.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல் :
குடும்பத்தினர் (618)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org